# முன்னேற்பாடு

*ஆசிரியரின் வழிகாட்டி நூலின் பாடங்களுடைய நல்ல முன் வைப்பானது நல்ல முன்னேற்பாட்டினால் சாத்தியமாகின்றது. பாடத்தை முன் வைப்பதற்கு ஒரு நபர் தம்மைத் தக்கமுறையில் தயார் செய்து கொண்டிருந்தால், அவர் நல்லதொரு பாடத்தை போதிக்க முடிகின்றது.*

*இந்த ஆசிரியரின் வழிகாட்டி நூலில் உள்ள பாடங்களை முன் வைக்க ஆசிரியர் தம்மைத் தாமே தயார் செய்து கொள்வதற்கு உதவியாகப் பின்வரும் ஆலோசனைகள் அளிக்கப் படுகின்றன:*

*1. ஜெபத்தில் நேரத்தைச் செலவிடுங்கள், நீங்கள் தக்க வகையில் தயாராகும்படியும், ஏற்புடைய எண்ணப்போக்குகளைக் கொண்டிருக்கும் படியும், பாடத்தைப் போதிக்க உங்களைத் தயாராயிருக்கும்படியான விஷயங்களைச் செய்யும்படியும், திறந்த மனதுடன் பாடத்தை அணுகும் படியும், பாடக் கருத்தைப் பற்றி வேதாகமம் கற்பிக்கின்றவைகளைத் தெளிவாய் காண முடியும்படியும், பாடக் கருத்தை இயன்ற அளவு முழுமையாகப் புரிந்து கொள்ளும்படியும், கற்பவருக்கு பாடத்தைப் புரிந்து கொள்ளச் செய்வது எப்படி என்று அறியும்படியும், கிறிஸ்துவின் நல்லதொரு பிரதிநிதியாய் இருக்கும்படியும் ஜெபம் செய்யுங்கள்.*

*2. பாடங்களைப் பற்றிய எல்லா அறிவுறுத்தல்களையும் வாசியுங்கள், மற்றும் பிறகு பாடத்தையே வாசியுங்கள், அத்துடன் (அதில் உள்ள) வேத வசனங்கள் யாவற்றையும் கண்ணோக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். (பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) வேத வசனங்கள் எல்லாவற்றையும் கண்ணோக்குதல் என்பது மட்டுமின்றி, முழு சந்தர்ப்பப் பொருளையும் புரிந்து கொள்வதற்கு அவ்வசனங்களைச் சுற்றிலுமுள்ள மற்ற வசனங்களை யும் வாசித்தலும் முக்கியமானதாக உள்ளது. சில வசனப் பகுதிகள் முன்னிறுத்தும் பிரச்சனைகளைக் கையாள ஆசிரியர் தயார் நிலையில் இருப்பார். பாடத்தின் சீரான ஓட்டத்திற்கும், மற்றும் பாடத்தின் நோக்கத்திற்கும் அவர் சிறப்புக் கவனத்தைச் செலுத்துவார்.*

*3. முழுப்பாடத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டியது என்ன என்பதையும் மற்றும் பாடத்தில் ஒவ்வொரு பகுதி மற்றும் ஒவ்வொரு கூற்று ஆகியவற்றின் நோக்கம் என்ன என்பதையும் தீர்மானம் செய்யுங்கள். பாடத்தின் நோக்கத்தையும் மற்றும் ஒவ்வொரு பகுதியின் நோக்கத்தையும்*

எழுதுங்கள்.

4. போதிக்கப்படும் நபரின் மீது ஒரு கண்(ணோக்கு) வைத்துப் பாடத்தை ஆலோசியுங்கள். அவரது தேவைகள், அவரது எண்ணப் போக்குகள், அவரது பின்னணி, வேதாகமத்தைப் பற்றிய அவரது புரிந்து கொள்ளுதல், மற்றும் அவர் இயேசுவை அர்ப்பணிப்புடன் பின்பற்றுப வராக ஆவதற்கு அவருக்கு உதவும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள்.

5. ஒரு கருத்தைத் தெளிவாக்குவதற்கோ அல்லது கற்பவரின் சிந்தையில் சத்தியத்தை ஆழப் பதியவைப்பதற்கோ உதவியாய் இருக்கக்கூடிய விளக்கங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். நல்ல விளக்கங்கள் என்பவை போதனையைப் புரிந்துகொள்ள ஒரு மாணவருக்கு உதவுவதுடன் பாடத்தை அதிகம் ஆர்வத்திற்குரியதாகவும் ஆக்குகின்றன.

6. ஒரு வேதவசனம் வாசிக்கப்படும் போது கற்பவர் எதைக் கண்ணோக்க வேண்டும் என்று அறிந்து கொள்ளத் தயார் செய்யும் வகையில் உதவும் கேள்விகளைப் பற்றிச் சிந்தியுங்கள். நல்ல கேள்விகள், வசனத்தில் பாடத்திற்குப் பொருத்தமான தகவல்மீது கற்பவர் கவனம் செலுத்தவும் மற்றும் வெறுமையாய்ச் செல்கின்றது எது என்று காண்பதற்கும் உதவும்.

7. பாடத்தை அறிமுகப் படுத்தவும், பாடத்தை எடுத்துரைக்கவும் மற்றும் பாடத்தைத் தொகுத்துரைத்து முடிவு செய்யவும் தயாராய் இருங்கள். அறிமுகம் என்பது மாணவரைப் பாடத்திற்குத் தயார் செய்ய வேண்டும், பாடத்தின் கருப்பொருள்/உடல் பகுதி என்பது பாடத்தாளின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கருத்துக்களை விவரிக்க வேண்டும், மற்றும் தொகுப்புரையும் முடிவுரையும் எடுத்துரைக்கப்பட்ட பாடத்தைச் சுருக்கமாக மீண்டும் பார்வையிட வேண்டும்.

இவ்வழிமுறைகளில் ஆசிரியர் தம்மைத் தாமே தயார் செய்து கொண்ட பிறகு, அவர் உண்மையான கற்பித்தல் அனுபவத்திலிருந்து, அனுபவத்தின் வாயிலாகப் பாடத்தை நன்கு பழகிக் கொள்வதற்காக அதை ஒரு நண்பரிடத்தில் எடுத்துரைக்க வேண்டும். இது, ஆசிரியர் பழக்கமற்ற சூழ்நிலை என்ற அழுத்தத்திலிருந்து விடுபட்டவராய் நட்புறவான சூழலில் (பாடத்தை) எடுத்துரைக்கும் திறமையை மேம்படுத்த உதவும். பாடத்தை எடுத்துரைக்கும் பொழுது அந்தப்பாடம் பிற்பாடு யாருக்கு(ச் சென்றடைய) நோக்கம் கொண்டுள்ளது என்பதை ஆசிரியர் தம் சிந்தையில் கொண்டிருக்க வேண்டும்.

கற்பவரின் செயல்முறைக்கோ அல்லது அவருக்கு அறிவுரைக்கோ தரப்படும் பாடத்தின் ஒவ்வொரு எடுத்துரைப்புக்கும் பிறகு, ஆசிரியர் பாடத்தைத் தாம் நடத்தியது பற்றி மதிப்பிட வேண்டும். மதிப்பீட்டிற்குப் பின்வரும் வினாக்களைப் பயன்படுத்தலாம்:

1. நான் பாடத்தைத் தக்க முறையில் அறிமுகப்படுத்தினேனா?

2. பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் ஏற்ற வகையில் எடுத்துரைத்து, ஒவ்வொரு பகுதியின் நோக்கத்தையும் நிறைவேற்றினேனா?

*3. அறிமுகத்திலிருந்து பொருளடக்கப் பகுதிக்கும், அதில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கும், பாடத்தின் பொருளடக்கப் பகுதியிலிருந்து பாடத்தின் முடிவுரைப் பகுதிக்கும் நான் தடங்கலற்ற, மென்மையான வகையில் மாறிச் செல்லுதலை ஏற்படுத்தினேனா?*

*4. எனது கேள்விகள் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டனவா? மற்றும் அவை நாம் வாசித்த வேத வசனப்பகுதிகளில் இருந்து விரும்பப் படும் தகவலுக்குக் கற்பவரைத் தயாரித்தனவா?*

*5. நான் எனது விளக்கங்களை ஏற்ற முறையில் பயன்படுத்தினேனா? அவை பாடத்தை உயர்த்தி பிடித்தனவா?*

*6. ஒவ்வொரு பகுதிக்கும் மற்றும் பாடம் முழுமைக்குமான எனது நோக்கத்தை நான் நிறைவேற்றினேனா?*

*7. பாடத்தில் மாணவர் எதைக் கற்க வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதை மாணவர் புரிந்து கொண்டாரா?*

*8. பாடத்தை நான் போதுமான அளவில் தொகுத்துரைத்து முடித்திருந்தேனா?*

மேற் கூறியவற்றில் சில பகுதிகளை நன்கு செய்யவில்லை என்று ஆசிரியர் கண்டறிவாரேயானால், அடுத்த பாடத்தை நடத்துவதில் அவர் சிறக்கச் செய்ய முயற்சிப்பதில் நேரம் செலவிட வேண்டும். முதல் வகுப்பு என்பது சீராக இல்லாது போகலாம் ஆனால் ஒவ்வொரு பாடத்தை நடத்தும் பொழுதும் மேம்படுத்திக் கொள்வதற்கான பொறுமையின் விளைவாகச் சுலபமாய்ப் பாடத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது செயல்முறையில் வரும்.